ISSN:2582-9599



# "உலகமே ஒரு நாடகமேடை" - நாடகத்தின் உருவாக்கத் தேவைகள்

**திருமதி ச. கண்ணகி**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்,**
**திருவள்ளுவர் கல்லூரி பாபநாசம், பாத்திமா கல்லூரி.**

**64**

**ஆய்வுச் சுருக்கம்**

"கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்
உணர்வுடை மாந்தர்க்கு அல்லது தெரியின்
நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே"

(தொல்காப்பியம். பொருள். மெய். 27)

மலைகளின் அரசி கொடைக்கானல் என்பது போல, கலைகளின் அரசியாகத் திகழ்வது நாடகக் கலையாகும். எட்டு வகையான மெய்ப்பாடுகளும் ஒருவர் தன் உடலில் தோன்ற நடிப்பது நாடகத்தின் தனிச்சிறப்பாகும். இக்கலை சங்க காலத்தில் கூத்தாக வளர்ந்து பின் இருண்ட காலத்தில் (சமண, பௌத்த) நழிவுற்று, பக்தி இலக்கிய காலமான பல்லவர் காலங்களில் செழித்து வளர்ந்து, சோழர் காலங்களிலும் அவ்விதமே இருந்து, அதற்குப் பிறகான இஸ்லாமிய படையெடுப்புகளில் பின்னடைவை அடைந்து பின்பு 17ஆம் நூற்றாண்டுகளின் இறுதியில் புத்துயிர் பெற்று டம்பாச்சாரி விலாசம் என்ற பெயரில் மேடையேறி, பம்மல் சம்பந்தர் - பரிதிமாற் கலைஞர் - சங்கரதாஸ் சுவாமிகளால் வளம் செழித்த வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டது. தமிழ், சீனம், எகிப்து, கிரேக்க மொழிகளில் இக்கலை தன்மக்களை வழிநடத்திய வரலாற்றுச் சூழலின் சில பதிவுகள் விளக்கப்படுகின்றன.

**ஆய்வு நோக்கம்**

மனிதனைத் தன்வயப்படுத்தி, நகர்த்தவிடாது கட்டுவித்து, மனித மனதோடு பேசி, அவனின் வாழ்நாட்களுடன் முன்னமும் பின்னமும் நடந்து, அவனை அழச்செய்து - சிரிக்கச் செய்து, வாழ்வின் இருபக்கங்களான இன்ப - துன்பங்களைக் காட்டுவித்து அதன் வழியாக மனிதனுக்குள் சிந்தனையை உருவாக்குவது நாடகத்தின் நோக்கமாகும். தமிழில் பல்வேறு நாடகங்கள் படைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழ் நாடக உலகின் இமயமலை சங்கரதாஸ்சுவாமி அவர்கள் ஒரே இரவில் எந்தவிதமான அடித்தல் திருத்தல் எதுவும் இன்றி அபிமன்யு சுந்தரி என்ற நாடகத்தை படைத்துள்ளார். மேலும் தன் வாழ்வில் 40 நாடகங்களை எழுதியிருக்கிறார். 'உலகமே ஒரு நாடக மேடை' என்று எழுதிச் சென்ற ஷேக்ஸ்பியர் அவர்கள் தன் வாழ்நாட்களில் 36 நாடகங்களை எழுதிக் குவித்துள்ளார். சமூக நாடகங்கள், புராண நாடகங்கள், வரலாற்று நாடகங்கள், வாழ்க்கை வரலாற்று நாடகங்கள், அரசியல் நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள், மொழிபெயர்ப்பு நாடகங்கள், துப்பறியும் நாடகங்கள் என பல்வேறு வகையான நாடகங்கள் உருவாகியுள்ளன. இந்த நாடகங்களைப் படைத்த படைப்பாளிகள் தன் படைப்புகளின் வழிச் சமூகத் தொண்டாற்றினார்கள். தமிழ் மொழியில் உருவான நாடகங்களின் தோற்ற காரணங்கள் குறித்தும் உலகில் காணப்படும் பல்வேறு மொழிகளில் சில

மொழிகளைச் சுட்டிக்காட்டி அம்மொழிகளில் நாடகங்கள் உருவான தோற்ற காரணங்கள் குறித்தும்( கிரேக்கம் சீனம் ஆங்கிலம் எகிப்து) விளக்குவது இக்கட்டுரையில் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**

கூத்தநூல், இசைநுணுக்கம், அகத்தியம், சீகூ- இசை நாடகம், ஷேக்ஸ்பியர், சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்மந்த முதலியார், டியோனிசஸ் - கிரேக்க நாட்டுத் தெய்வம் , அரிஸ்டாட்டில், டம்பாச்சாரி விலாசம், சாரகுண பாண்டியன், கண்ணுக்கினியாள், சிகண்டி.

**முன்னுரை**

அகத்தியம் என்ற முதற்சங்க இலக்கண நூலானது தமிழில் முதன்முறையாக நாடகக்கலையின் தோற்றத்தினை விவரிக்கின்றது. சங்ககாலத்தில் குணநூல், கூத்தநூல், சையந்த நூல் போன்ற நாடக நூல்கள் இருந்தன என்பதனை சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் அவர்கள் குறிப்பிட்டு காட்டியிருக்கிறார். மேலும் தமிழில் கிடைத்த தமிழருக்கு கிடைத்த முதல் உயிர்ப்பு நூலாம் தொல்காப்பியத்தில் நாடகக் கலைக்கான சான்றுகள் பல குறிப்பிடப்பட்டுள்ளன. கதை கேட்டலும் கதை சொல்லலும் எவ்வாறு மனிதர்களின் இயல்பாக இருந்ததோ அதற்கு முன்னரே கைகளையும் கால்களையும் ஆட்டக் காட்டி அதன் வழி மனதின் உணர்வுகளைப் புரிய வைத்தல் என்ற கலையும் மனித தோற்றத்தோடு தொடர்புடையதே ஆகும். இவ்வகைப் புரிதலோடு "உலகம் ஒரு நாடக மேடை" - நாடகத்தின் தோற்றக் காரணங்கள் என்ற பொருண்மையை இக்கட்டுரை விவரிக்க சிந்திக்க முற்படுகிறது.

**கூத்த நூல்**

மேற்சொன்ன கூத்தநூல் என்னும் பெயரில் இரண்டு நூல்கள் காணப்படுகின்றன. ஒன்று தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் அவர்களும், சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் அவர்களும் தாங்கள் மேற்கோள் காட்டிய பாடல்களில் கூத்த நூல் என்று ஒரு பெயரினைக் குறிப்பிட்டு காட்டுகிறார்கள். (இந்த கூத்த நூலிற்கு மதிவாணனார் நாடகத்தமிழ் என்ற பெயரினையும் அறிஞர் பெருமக்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்). கூத்தநூலில் இரண்டாவது சாத்தனார் செய்த கூத்த நூல். இந்த நூல் சங்க காலத்தைச் சார்ந்ததாகும். இந்த சங்க கால கூத்த இலக்கண நூலானது மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும். அவை பாயிரம் சுவை நூல் தொகை நூல் என்பதாகும். இவற்றுள் சுவைநூல் என்ற பிரிவின் கீழ் அமைந்த நூற்பாக்களில் நாடகத்தின் பரிணாமங்கள் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது.

"மோனத்து இருந்த முன்னோர் கூத்தில்
உடுக்கையில் பிறந்தது ஓசையின் சுழலே
ஓசையில் பிறந்தது இசையின் உயிர்ப்பே
இசையில் பிறந்தது ஆட்டத்தின் இயல்பே
ஆட்டம் பிறந்தது கூத்தினது அமைவே
கூத்தில் பிறந்தது நாட்டியக்கோப்பே
நாட்டியம் பிறந்தது நாடக வகையை"

கூத்த நூல்

என்று நாடகத்தின் தோற்றப் பின்னணி குறித்து பதிவிடப்பட்டுள்ளது.

**தமிழில் நாடகம்**

பார் போற்றும் தமிழ் மொழியில் இருவகை நாடகங்கள் நடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன. அது வேதியல் என்றும் பொதுவியல் என்றும் அமைகின்றது. வேந்தனுக்காக நடித்துக் காட்டப்படுவது வேத்தியல் என்றும், பொதுமக்களுக்காக நடித்துக் காட்டப்படுவது பொதுவியல் என்றும் பெயர் பெற்றிருந்தது. சங்க காலத்தில் இருந்த நாடக அமைப்பானது அதன் பின்னரான சமண, பௌத்த சமயங்களால் நாடகக்கலை ஒளியிழந்தது. சங்க காலத்தில் நடைமுறையில் இருந்த வேதியல் கூத்தானது 17ஆம் நூற்றாண்டு காலகட்டத்தில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி நாடகங்களாக உருப்பெறுகின்றன. பின்னர் தெருக்கூத்து என்ற தோற்றம் காலத்தின் தேவையானது. கூத்தநூல் எவ்வாறு அடியார்க்கு நல்லார் அவர்களின் நுழைவாயிலாக நம்மால் அறிய முடிந்ததோ அதேபோலவே தமிழ் மொழியில் இசைநுணுக்கம் என்ற நாடக இலக்கண நூல் இருந்தது என்பதனையும் அடியார்க்கு நல்லார் அவர்களின் உரை வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகிறது. உரையாசிரியர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டு என்றும் நினைவில் கொள்ளத்தக்கதாக இருப்பதற்கு ‘இசைநுணுக்கம்’ என்ற நூலும் காரணமாக அமைகிறது. இந்நூல் அகத்தியரின் 12 மாணவர்களில் ஒருவரான சிகண்டி என்பவரால் எழுதப்பட்டு இருக்கிறது. தெய்வப்பாண்டியன் மகன் சாரக்குமாரன் என்பவர் இசை அறிதல் பொருட்டு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது. அடியார்க்கு நல்லார் வாயிலாக நாடக நூல்களில் இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாதிபதியம் என்ற நாடக நூல்களின் பெயர்களையும் நம்மால் அறிய முடிகிறது. உரையாசிரியர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டுகளில் இந்த நாடக நூல்களும் அமைகிறது என்பது மிகையல்ல குறிப்பிடத்தக்கது. ‘இசைநுணுக்கம்’ நூலினை அடிப்படையாகக் கொண்டு எழுத்தாளர் நா. பார்த்தசாரதி அவர்கள் கபாடபுரம் என்ற வரலாற்று சிறப்பு மிகுந்த நாவலை எழுதியிருக்கிறார். அந்நாவலின் கதை இவ்வாறு அமைகிறது. சாரகுண பாண்டியன் மற்றும் அவன் காதலி கண்ணுக்கினியாள் ஆகியவர்களின் இசைஞானம் சிகண்டியாசிரியரால் அறியப்பட்டு ஆராயப்பட்டு 59 புலவர்கள் சூழ்ந்த ‘கபாடபுரம்’ அரண்மனையில் இந்நூல் அரங்கேற்றம் செய்யப்படுவதாக இந்த நாவலின் கதை அமைகிறது. இந்த நாடக நூல்களின் வரிசையில் மீண்டும் ஒரு சிறப்பு வாய்ந்த நாடக நூலாக ‘மனோன்மணியம்’ என்ற நாடகம் அமைகிறது. பெ. சுந்தரம் அவர்கள் எழுதின இந்த நாடகநூல் ஒரு வரலாற்று நூலாக அமைகிறது(1891)

**ஈழத்தமிழ் நாடகங்கள்**

நாடகம் என்பது பல கலைகளின் கூட்டுச்சேர்க்கையாகும். நாட்டு + அகம் = நாடகம். நாட்டு மக்களின் அகத்தை பிரதிபலிக்கும் கலை. கதை, நடிப்பு, ஒப்பனை, இசை, ஓவியம், அரங்க அமைப்பு, இலக்கியம், ஒலி- ஒளி ஆகிய கலைகளின் ஒன்றிணைப்பால் உருவாக்கப்படுவது நாடகக் கலையாகும். நாடகப் பாங்கில் அமைந்த எட்டுத்தொகை நூல் புறநானூறு இவ்விடம் சிந்திக்கத்தக்கதாகும். தமிழைத்தாய் மொழியாகக் கொண்ட ஈழத்துத்தமிழ் மொழியில் நாடகங்கள் இரு பெரும் பிரிவுகளில் அமைகிறது. அவை மரபு வழி நாடகங்கள் நவீன நாடகங்கள் ஆகும்பண்டைய கூத்து முறைப்படி அமைந்த நாடகங்களை மரபு வழி நாடகங்கள் என்றும் ஆங்கிலேயர்கள் வருகைக்குப் பின்னர் வந்து புகுந்த வசனம் பேசி நடிக்கும் நாடகங்களையும் அதனை ஒட்டிய நாடக பாணிகளையும் நவீன நாடகங்களில் அடக்குகிறார்கள். மனிதனின் இயல்பான குணமாக இருந்தது நாடகம். ;ஒன்றைப் போல செய்து காட்டுதல்’ என்பது அவனுள் மகிழ்ந்த முதல் குணமாகும்.

நாடகத்தைக் குறிக்க பயன்படும் ‘டிராமா’ என்ற சொல்லின் பொருளும் 'ஒன்றைப் போலச் செய் அல்லது ஒன்றைப் போல நடித்துக் காட்டு' என்பதாகும்.

**உலக நாடகங்கள்**

உலக நாடகங்களின் தோற்றம் எகிப்தில் இருந்து தொடங்குவதாக நாடக ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். கிமு 3000 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்தில் நாடகம் தோன்றி விட்டது என்று கூறப்படுகிறது. ஐந்து விதமான எகிப்து நாடகங்கள் இருந்ததாக அறிய முடிகிறது. இந்த நாடகங்கள் கல்லறைக்கு முன்போ கோயில்களுக்கு முன்போ நிகழ்த்தப்பட்டன. இந்த நாடகங்கள் எழுதி வைக்கப்பட்டு இருந்த இடம் நம்மால் மறக்கவே முடியாத ஒரு இடமாகும். அது பிரமிடுகளின் சுவர்களில் எழுதி வைக்கப்பட்டிருந்தன என்பது சுவாரசியம். 1961 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 27ஆம் நாள் ‘உலக நாடக அரங்க நாள்’ என்று கொண்டாடப்பட்டு வருகிறது.

பரந்து விரிந்து கிடக்கின்ற இந்த உலக அரங்கிலே இலக்கண இலக்கிய வளம் பெற்று திகழும் மொழிகள் மிகச் சிலவே ஆகும். கிரேக்கம், சமஸ்கிருதம், லத்தின், பாரசீகம், அரபு, எபிரேயம்,சீனம் மற்றும் தமிழ் இந்த எட்டு மொழிகளும் தான் உலக அரங்கிலே செம்மொழிகளாக கருதப்படும் வளம் நிறைந்த மொழிகளாகும்.

**கிரேக்க மொழியில் நாடகங்கள்**

கிரேக்க மொழியில் நாடகங்கள் கிமு 534 ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்றிருக்கக் கூடும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கிரேக்க நாட்டு மேதையான அரிஸ்டாட்டில் அவர்கள் கூறும் கருத்து இங்கே சிந்திக்கத் தக்கதாக உள்ளது. அதாவது ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளின் காலகட்டங்களில் அந்நாட்டில் வணங்கப்படுகின்ற சக்தி வாய்ந்த தெய்வமான 'டயோனிசஸ்' திருவிழா கொண்டாடப்பட்ட போது, அந்த தெய்வத்தை பெருமைப்படுத்தும் விதமாக மக்கள் அனைவரும் குழுவாக கூடி நடனங்களை நடத்தினர். அந்த நடனங்கள் நடைபெறும் போது தமிழ்நாட்டில் நடைபெறும் வெறியாட்டுப் பாடல் போன்று பக்தி பரவசத்தால் ஆன பாடல்கள் பாடப்படும். இந்த ஆடல் பாடல் நிகழ்விலிருந்து நாடகங்கள் பிறந்தன என்று அரிஸ்டாட்டில் கூறும் கருத்து இங்கே சிந்திக்கத்தக்கதாகும். நாடகங்களின் தோற்றக் காரணங்களுக்கு வழு சேர்ப்பதாக அமைகிறது ‘டியோனிசஸ்’ தெய்வத் திருவிழா காலகட்டங்களில் கோவில்களின் மேற்கு பகுதியில் கோட்டை போன்ற அமைப்பின் சரிவான பகுதிகள் நாடக அரங்குகளாக பயன்படுத்தப்பட்டது. ஆனால் பெரும்பாலான கிரேக்க நாடகங்கள் திறந்த வெளியிலேயே நடத்தப்பட்டது. ரோமானிய நாட்டுப் பேரரசன் மாவீரன் அலெக்சாண்டரின் படையெடுப்புக்கு பின்னர் கிரேக்க நாடகம் பெரும் வீழ்ச்சியை அடைந்தது என்று 'தமிழ் மரபு வழி நாடக மேடை' என்ற தன து நூலில் ஜீவன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

**சீன மொழி நாடகங்கள்**

‘சீகூ’ என்பது சீன மக்களிடையே இன்று பரவலாக வழங்கப்படும் இசை நாடகங்கள் ஆகும். இன்று வழக்கில் இருக்கும் இந்த நாடகங்கள், இதன் தோற்றம் பண்டைய சீன நாட்டிலேயே தொடங்கிவிட்டது. பண்டைய சீன மக்களிடையே இருந்து பல்வகையான கூட்டு நிகழ்த்து கலையின் ஒட்டுமொத்தையே இன்று ‘சீகூ’ என்று அழைக்கிறார்கள். சீன நாட்டில் நிகழ்ந்த ஆறு பேரரசுகளின் காலத்தில் பலவகை இசையும் நடனமும் கலந்த நாடகங்கள் உருவாகின. ஆக சீன நாட்டு நாடக

கலையானது பல ஆயிரம் ஆண்டுகளாக கால் பதித்து மலர்ந்த கலை வடிவம் ஆகும். கிட்டத்தட்ட ஆறு பேரரசுகளின் காலத்தில் உருவான நாடகங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் அமைந்தன. அதில் 'சீகூ' என்று சொல்லப்படுகின்ற இந்த நாடகக் கலையானது சாங் பேரரசின் காலகட்டத்தில் உருவான மிக எளிய நாடகங்கள் ஆகும்.

உலகம் என்று சொல்லப்படுகின்ற பூமிப்பந்ததானது நிலம் நீர் ஆகியவற்றின் ஒழுங்கு அடிப்படையிலும் மேலும் சிலதான வரையறுகளின் அடிப்படையிலும் ஏழு கண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென்அமெரிக்கா, அண்டார்டிகா, ஐரோப்பா மற்றும் ஆஸ்திரேலியா என்பனவாகும். உலக உருவாக்கத்தில் மனித இனத்தின் தோற்றம், அவர்களின் பரிணாம வளர்ச்சிகள் - அறிவியலாளர்கள், ஆராய்ச்சியாளர்களால் விளக்கி தெளிவாகப்பட்டு வருகின்றது. அதில் மனிதன் தன்னை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டவே மொழிகளைப் பயன்படுத்தத் துவங்கினான் என்பது மிகவும் தீர்க்கமான ஒரு முடிவாகும். அவ்வகையில் இன்று ஏழு கண்டங்களையும் உள்ளடக்கிய உலக அமைப்பில் 6500 க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. இத்தனை மொழிகளிலும் எட்டு மொழிகளைச் செம்மொழிகள் என்று குறிப்பிடுகின்றனர் என்பதை முன்னமே நாம் கண்டோம். இத்தனை ஆயிரம் மொழிகளைக் கொண்ட உலகின் மிக மூத்த மொழி எது என்பதைக் கேட்டால் சந்தேகத்திற்கு இடமின்றி தமிழ் மொழி என்று, ஆதாரங்களின் அடிப்படையிலும் கல்வெட்டு ஆராய்ச்சிகளின் அடிப்படையலும் கூறி முடிகின்றது. அத்தகைய பெரும் சிறப்புக்குரிய மொழி பேசப்படுகின்ற இந்தியத் திருநாடு ஆசியக் கண்டத்தில் இடம் பெற்றுள்ளது.

உலகில் அதிக மொழிகள் பேசும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அதனால்தான் இந்தியா மொழிகளின் காட்சி சாலை என்று அழைக்கப்படுகின்றது. இந்தியா 1652 க்கும் மேற்பட்ட மொழிகள் பேச்சு வழக்கில் உள்ளன. இம்மொழிகளில் தமிழ், சமஸ்கிருதம், கன்னடம், தெலுங்கு, மலையாளம் மற்றும் ஒடிசா என்னும் ஆறும் இந்தியச் செம்மொழிகளாக அந்தஸ்தைப் பெறுகின்றன. உலக அளவில் 6500 க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டாலும் இந்திய திருநாட்டில் 1600க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டாலும் மனிதர்கள் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து ஒட்டுமொத்தச் சமுதாயமாக வாழ முற்பட்ட காலத்திலிருந்தே நாடகங்கள் வெவ்வேறு வடிவத்தில் அரங்கேறி வந்திருக்கிறது. தமிழ் நாடக வளர்ச்சியில் பல்வேறு ஏற்ற தாழ்வுகள் இருந்த நிலையில் 19ஆம் நூற்றாண்டுகளில் நாடகக் கலைக்கு வலுவும் பெருமையும் சேர்த்த பெருமை சங்கரதாஸ் சுவாமிகளையே சேரும்.

**நிறைவாக**

"உலகம் மொத்தமும் ஒரு நாடக மேடை.

எல்லா ஆண்களும் பெண்களும் அதில் வெறும் நடிகர்கள்.

காட்சிகளில் தோன்றி மறைகின்றவர்கள்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் பல கதாபாத்திரங்களை ஏற்று நடக்கின்றான்"

இவ்வரிகளுக்குச் சொந்தக்காரரான ஷேக்ஸ்பியர் இங்கிலாந்து நாட்டு தேசியக் கவிஞர் மற்றும் நாடகஎழுத்தாளர். இவர் தன் ஆரம்ப காலகட்ட எழுத்துக்களில் நகைச்சுவையையும் பின் வரலாறுகளையும் எழுத்துக்களில் படைத்துள்ளார். இந்த நாடகக்கலைஞர் கிட்டத்தட்ட 36 நாடகங்களை எழுதியிருக்கிறார். மனித வாழ்வியலின் பல்வேறு இருப்புகளை தன் நாடகங்களின்

வாயிலாக இவ்வுலகிற்கு விட்டுச் சென்றுள்ளார். நிறைவாக இவ்வுலகில் எத்தனை மொழிகள் பேசப்பட்டாலும், எத்தனை இலக்கண இலக்கியங்கள் தோன்றினாலும் தனிமனித வாழ்வியல் என்பது மிகக்குறைந்த காலகட்டங்களைக் கொண்டது ஆகும். அந்த மிகக்குறைந்த காலகட்டங்களை மனிதன் எவ்வாறு பயன்படுத்திவாழ வேண்டும் என்பதற்குப் பல்வேறு சான்றுகளை நாடகங்கள் இவ்வுலக மக்களுக்கு எடுத்தியம்புகின்றன.

**துணை நூற்பட்டியல்**

1. கவிஞர் ஜீவன், தமிழ் மரபு வழி நாடக மேடை, நர்மதா பதிப்பகம் ,2000
2. பதிப்பாசிரியர் - டாக்டர் முத்துசண்முகன் டாக்டர் ராமபெரிய கருப்பன், நாடகக் கலையின் வரலாறு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
3. ஔவை தி.க சண்முகம் , நாடகக் கலை,
4. அழகப்பன். ஆறு , தமிழ் நாடக பரிணாம வளர்ச்சி,
5. பார்த்திபராஜா. கி , தமிழ் கலை மணிகள், பாரதி புத்தகாலயம் -2018
6. கந்தசாமி சோ.நா, உலக தமிழ் இலக்கிய வரலாறு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ,சென்னை – 2004
7. பாலசுப்பிரமணியன் சி, தமிழ் இலக்கிய வரலாறு நறுமலர்ப் பதிப்பகம், சென்னை-1992